## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் (நிதியம்) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு

பேணுதல்” நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) காசுப்பாய்ச்சல் கூற்றின் நிதிச் செயற்பாட்டு நடவடிக்கையின் காசுப்பாய்ச்சல் ரூபா 136,789,178 ஆன தொகையாகவுள்ளன காசும் காசுக்கு சமனானவையும் தொகையானது ரூபா 196,058,529 ஆக தவறுதலாக காணப்பட்டிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்று ரூபா 219,058,529 ஆக காட்டப்பட்டிருந்தன. | காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாட்டு நடவடிக்கையின் விசேட வைப்பு ரூபா 23,000,000 தொகை மாற்றமானது நிதி செயற்பாட்டு நடவடிக்கையினுள் உள்ளடக்கப்பட்டிருக்காமையினால் இந்த வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. | காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாட்டின் கூட்டுமொத்தம் ரூபா 159,789,178 தொகை சரியாக காட்டப்பட வேண்டும். |
| (ஆ) இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங்கள் தொடர்பாக ஆரம்ப நிலுவைகளை கருத்தில் கொள்ளாமல் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட்டதனால் ரூபா 16,798,014 பெறுமதியான அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | இந்த தவறினை சரிசெய்வதற்கு ரூபா 16,798,014 பெறுமதியான பொது நாட்குறிப்பேட்டின் மூலம் திருத்தக் செய்யப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றில் மீளாய்வாண்டுக்கான சரியான பெறுமானத்தேய்வு காட்டப்படவேண்டும். |
| (இ) கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,364,726 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் மற்றும் ரூபா 327,597 பெறுமதியான இயந்திரங்களுக்கு பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | ரூபா 905,705 பெறுமதியினால் திரண்ட நிதி நாட்குறிப்பினால் குறைவடைந்து காட்டப்பட்டிருந்தன. | நிதிக்கூற்றில் மீளாய்வாண்டுக்கான பெறுமானத்தேய்வு காட்டப்பட வேண்டும். |
| (ஈ) நிலையான சொத்துக்களை கொள்வனவ செய்யும் போது செலுத்தப்பட்ட ரூபா 1,468,590 பெறுமதியான பெறுமதி சேர் வரியானது காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாட்டில் காட்டப்படாமல் முதலீட்டு செயற்பாட்டில் காட்டப்பட்டிருந்தன. | காசுப்பாய்ச்சல் கூற்றின் சரியான வகைப்படுத்திலின் கீழ் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,468,590 பெறுமதியான பெறுமதி சேர் வரி தொழிற்பாட்டு செயற்பாட்டின் கீழ் காட்டப்பட்டிருக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) நிலையான வைப்பபு வட்டிகள் ரூபா 1,036,500 பெறுமதியானது நிதிக்கூற்றில் குறைத்துக்காட்டப்பட்டிருந்தன. | தேசிய சேமிப்பு வங்கியில் 2018 ஆம் ஆண்டில் ரூபா 20,000,000 வைப்பிலிடப்பட்டிருந்தன. இவ் வைப்புக்கான கூட்டுமொத்த வட்டி வருமானக்கூற்று 2019.03.11 இல் கிடைக்கப் பெற்றிருந்தன. அதன்படி, ஆண்டிற்கான மொத்த வைப்புத் தொகையாக ரூபா 2,010,750 ஆகவுள்ளது. அதன்படி, கணக்கில் இடப்பட்ட ரூபா 973,750 இனை விட ரூபா 1,036,500 மேலதிகமாக கணக்கில் காட்டப்படுவதற்கு பொது நாட்குறிப்பேட்டின் மூலம் பதிவுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிதிக்கூற்றில் ரூபா 1,036,500 பெறுமதியான நிலையான வைப்பு வட்டிகள் காட்டப்பட வேண்டும் |
| (ஊ) காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,131,765 பெறுமதியான பெறுமதி சேர் வரியானது தனியாக காட்டப்படாமல் ஏனைய பற்றுச்சீட்டுக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | சரியான வகைப்படுத்திலின் கீழ் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 1,131,765 பெறுமதியான பெறுமதி சேர் வரியானது தனியாக காட்டப்பட்டிருத்தல் வேண்டும். |

**1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| கிடைக்கப் பெற்ற விடயம் | தொகை | கணக்காய்வு சான்றுகளின்மை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| காசும் காசுக்கு சமனானவையும் | 196,058,529 | வங்கி கணக்கிணக்கக் கூற்று | உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | ரூபா 196,058,529 பெறுமதியான காசும் காசுக்கு சமனானவைகளின் மீதிகளுக்கு வங்கிக் கணக்கிணக்க கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1995 இன் 35 ஆம் இலக்க அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 20(1)(அ) மற்றும் 37 ஆம் பிரிவு | வியபாரத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து அளவீட்டு உபகரணங்களும் வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த அனைத்து உபகரணங்களும் சரிபார்க்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தில் காணப்படும் வரையறுக்கப்பட்ட உத்தியோகத்தரினால் விரிவான பிரச்சாரம் கிராம சேவகரினூடாக மேற்கொள்ளப்பட்டு ஆய்வு நிலையத்தினூடாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு ஆய்வு செய்யப்படாத வேலையில் நாடாளவிய ரீதியாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுடாக தெரிந்துகொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் எல்லா அளவீட்டு கருவிகளுக்குமான சரியான நடவடிக்கைகள் நிதியத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 117,075,484 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 129,971,134 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 12,895,650 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஆதனம், பொறி இயந்திர உபகரணங்களின் பெறுமானத்தேய்வு, பராமரிப்புக் செலவினங்கள், மனிதவளங்களின் அபிவிருத்திக்கான செலவிங்கள், பயிற்சியளித்தல் மற்றும் வழங்குதல் செலவினங்கள் என்பன மீளாய்வாண்டின் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாவட்ட அலுவலர்களினால் பரிசோதிக்கப்பட்ட அலகுகள் மற்றும் அது தொடர்பான கட்டணங்களை அறவிட்டு கொள்வது தொடர்பான தகவல் | ஆய்வுகள் தொடர்பாக அறவிடப்படும் வருமானங்கள் தொடர்பான வருமானக்கூற்று அறிக்கையானது மாவட்ட அளவுக்கூறுகள்,நியமங்கள் | மாவட்ட அதிகாரியினால் இணக்கம் செய்யப்பட வேண்டிய அலகுகள் மற்றும் அது |

| | | |
|---|---|---|
| அறிக்கைகள் உத்தியோகத்தரினால் நிதியத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் உண்மைத்தன்மை உறுதிப்படுத்தற்கான தரவுகள் அல்லது உரிய செயன்முறைகள் நிதியத்தின் காணப்பட்டிருக்கவில்லை. | உத்தியோகத்தரினால் மாதாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன் திணைக்களத்தின் கணக்குப் பிரிவுகள் மூலம் உண்மைத் தன்மையை பரிசோதிக்கப்பட வேண்டும். வங்கி இணக்கக்கூற்றின் மூலம் வருமானம் தொடர்பான நிதி உரிய முறையில் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளதா என்பதனை பரிசோதனை பார்க்கப்படும். | தொடர்பான அறவிடப்படும் வருமானம் தொடர்பான உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான தரவு முறைகள் மற்றும் செயன்முறைகள் உருவாக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிலையான சொத்துக்கள் பதிவேடு சரியான முறையில் பேணப்பட்டிருக்கமையினால் ஒவ்வொரு சொத்துக்களின் கொள்வனவு திகதிகளை தெரிந்து கொள்ளமுடியாமையினால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வுகளை உறுதிப்படுத்தமுடியாமலுள்ளது. | ஏற்றுக்கொள்கின்றோம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு சரியான முறையில் பேணப்பட்டிருக்க வேண்டும். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்திற்கு உள்ளகக்கணக்காய்வாளர் நியமிக்கப்படாமையினால் நிதியத்தின் கணக்குகள் உள்ளகக் கணக்கய்வாளர்களினால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் உள்ளகக்கணக்காய்வாளராக இலங்கை கணக்காளர் சேவைகள் உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டதன் பின்னர் எதிர்வரும் காலத்தில் உரிய முறையில் கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கள் நியமிக்கப்பட்டு கூட்டங்களை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | திணைக்களத்திற்கு உள்ளகக் கணக்காய்வாளரொருவரை நியமித்து நியத்தின் நடவடிக்கைகளை உள்ளகக்கணக்காய்வுக்கு உட்படுத்துதல் வேண்டும். |